1968 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) சுமார் 360 பேர்கள்.

(இ) 56 பேர்கள்.

(உ) இல்லை.

(எ) வினாவிற்கு இடம் இல்லை.

அறந்தாங்கி துணைப்பதிவாளர் மேல் புகார்.

*119 **வினா—திரு. சா. மெய்யப்பன் :** மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி துணைப்பதிவாளர் பேரில் அழியாநிலை தி.மு.க. செயலர் புகார் மனு கொடுத்திருக்கிறாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

DR. H. V. HANDE : Is it a fact that some complaint from some source was made ? Was there any complaint against this officer from any source ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரு. எம். பெரியசாமி என்பவரிடமிருந்து ஒரு புகார் வரப்பட்டது. அதை மேலதிகாரி விசாரித்து அது போன்ற குற்றச்சாட்டுகள் மேலும் எழாவண்ணம் சப்-ரிஜிஸ்தார் நடந்து கொள்ள வேண்டுமென்று எச்சரித்திருக்கிறார்.

தொழிலாளர்கள் ஓய்வுபெறும் வயது.

*120 **வினா—திரு. எம். பூபதி :** மாண்புமிகு சட்ட–கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாலை, மோட்டார் இன்ஜினீயரிங், சிமெண்டு, ஆஸ்பஸ்டாஸ், டீ, காப்பி, போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், இம்முறை என்று முதல் அமலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, இவ்விஷயத்தை மீண்டும் புனராலோசனை செய்ய உத்தேசம் உண்டா ? வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதால் கோவையிலே 20,000 பஞ்சாலை, இன்ஜினீயரிங் தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்களே, இனிமேலாவது 58 வயதானவர்களுக்கு "ஓல்ட் ஏஜ் பென்ஷன் ஸ்கீம்" கொண்டுவர உத்தேசம் உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு தி ரு. செ. மாதவன் : இந்தக் கேள்வி ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த உத்தேசமுண்டா என்பதைப் பற்றியது. வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். அதுவே அதற்கு விடையாக அமையும்.

திரு. கே. என். குமாரசாமி : சார், ஓய்வு பெறும் வயதை 60-க்கு உயர்த்தாவிட்டாலும் அந்த வேலையிலிருந்து போகும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு அந்த ஆலைகளில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்யக்கூடிய நிலைமையை அரசாங்கம் உண்டாக்குமா ? அதாவது வாரிசு முறையை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வாரிசு முறை அமைப்பது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று இந்தியத் தலைமை நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. எனவே, சட்டத்திலே அதை உருவாக்க முடியாது. இப்பொழுது ஆங்காங்குள்ள தொழிற்சங்கங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு நடைமுறையில் இருக்கின்றன.